# “அவர்கள் நினைத்தார்கள்” [21:26-40]

*பெந்தெகொஸ்தே நாள் கடந்து சென்றிருந்தது, ஆனால் உலகம் எங்கிலும் இருந்து அந்தப் பண்டிகைக்காக வந்திருந்த மக்கள் வெள்ளம் எருசலேமின் வீதிகளில் புரண்டோடிக் கொண்டிருந்தது.*[1] *சிலர் தங்களின் வீடு திரும்பும் நீண்ட பயணத்திற்கான பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் அடுத்த ஆண்டு வரையிலும் தாங்கள் பார்க்க முடியாதிருக்கப் போகும் தங்கள் நண்பர்களைக் கடைசி முறையாகப் பார்த்துப் பேசுவதைச் சந்தோஷத்துடன் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு சிலரோ “தேவனுடைய நகரம்” என்று தாங்கள் அழைத்த அந்த நகரத்தை விட்டுச் செல்ல விருப்பமில்லாதவர்களாய் இருந்தார்கள். நகரத்தின் வடகிழக்கு மூலையில் மாபெரும் தேவாலயம் இருந்த இடத்தில் சிலர் பயங்கரமான நோக்கத்துடன் இருந்தார்கள்: அவர்களின் கொடிய கண்கள் பவுலின் ஒவ்வொரு அசைவையும் கூர்ந்து ஆராய்ந்து கொண்டு, அவரைத் துன்புறுத்துவதற்கு ஏதாவது சாக்குப் போக்கைத் தேடிக் கொண்டிருந்தன. விரைவிலேயே அவர்கள் அந்தச் சாக்குப் போக்கைக் காண்பவர்களாய் இருந்தார்கள்; அதன் பிறகு பவுல் தனது வாழ்க்கையிலேயே மிகவும் அபாயமான நேரங்களில் ஒன்றை எதிர்கொள்ள வேண்டியதாயிருந்தது.*

*நமது பாடத்தின் மையப்பகுதியானது அப். 21:29ல் காணப்படுகின்றது: “எபேசியனாகிய துரோப்பீமு என்பவன் முன்னே நகரத்தில் பவுலுடனேகூட இருக்கிறதைக் கண்டிருந்தபடியால், பவுல் அவனை தேவாலயத்தில் கூட்டிக் கொண்டு வந்திருப்பானென்று* நினைத்தார்கள்*” (அடிக்கோடிட்டவை என்னால் வலியுறுத்தப்படுகின்றன). அவர்கள் பவுலுடன் ஒரு புறஜாதியானை நகரத்தில் பார்த்தார்கள், பிறகு அவர்கள் பவுலை மற்ற சில மனிதர்களுடன் தேவாலயத்தில் பார்த்தார்*

கள் மற்றும் பவுல் அந்தப் புறஜாதியானை தேவாலயத்தினுள் கூட்டிக் கொண்டு வந்திருப்பார் என்று "அவர்கள் நினைத்தார் கள்"! அமெரிக்காவில் நாங்கள் இதை they "jumped to a conclusion" ("அவர்கள் அவசரமாய் முடிவு செய்தார்கள்") என்று கூறுவதுண்டு. பல யூகங்கள் சங்கடத்தை ஏற்படுத்துபவை களாய் இருக்கையில், அப். 21ல் உள்ள யூகங்கள் பவுலின் உயிருக்கே ஆபத்தாய் இருந்தன. நீண்ட காலத்திற்கு முன் மேற்கொள்ளப்பட்ட அந்த யூகங்களையும் - இன்றைய நாட்களில் மேற்கொள்ளப்படுகின்ற, ஏறக்குறைய அதே அளவு அபாயமுள்ள யூகங்களையும் நாம் கண்டுணர விரும்பு கின்றோம்.

## அன்றைய நாட்களின் அபாயமான யூகங்கள் (21:26-40)

எருசலேமில் இருந்த மூப்பர்களால் பவுலுக்கு, நசரேய விரதம் இருந்த நான்கு பேர்களின் சடங்காச்சாரங்களுடன் இணைந்து கொள்ளும்படியும் - அதற்கு நிதியுதவி அளிக்கும் படியும் - அறைகூவல் விடப்பட்டிருந்தது. அந்த நான்கு பேரும் தங்களைத் தீட்டுப்படுத்திக் கொண்டிருந்ததால், அதிக செலவு ஏற்படுத்தக்கூடிய ஏழு நாட்கள் செல்லும் சுத்திகரிப்பைச் செய்ய வேண்டியிருந்தது என்பது உறுதியாகும். தெளிவற்ற தாயிருக்கும் சில காரணங்களுக்காக, பவுல் "அந்த மனுஷரைச் சேர்த்துக் கொண்டு, ... தானும் சுத்திகரிப்புச் செய்து கொண்டு, தேவாலயத்தில் பிரவேசித்து, அவர்களில் ஒவ்வொருவனுக் காகவும் வேண்டிய பலி செலுத்தித் தீருமளவும் சுத்திகரிப்பு நாட்களை நிறைவேற்றுவேனென்று அறிவித்தான்" (வ. 26). ஒவ்வொரு நாளும் பவுல் தேவாலயத்தின் உள்ளும் புறமும் சென்று, சுத்திகரிப்பின் சடங்குகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து அதில் பங்கேற்று வந்தார்.

### சாவுக்கேதுவான ஒரு யூகம்

"அந்த ஏழு நாட்களும் நிறைவேறி வருகையில்" (வ. 27அ), ஆசியாவில் இருந்து வந்த யூதர்கள் தேவாலயத்தில் பவுலைக் கண்டார்கள். அநேகமாக, இவர்கள் பவுல் சமீபத்தில் மூன்று


*ஆண்டுகள் ஊழியம் செய்திருந்த எபேசுவில் இருந்து வந்திருக்கலாம். அந்த யூதர்கள் அவர் பிரசங்கித்ததைப் புறக்கணித்திருந்தார்கள் (19:8, 9), மறுபடி மறுபடி அவருக்கெதிராகத் திட்டம் தீட்டியிருந்தார்கள் (20:18, 19), மற்றும் அந்த அப்போஸ்தலரை ஒழித்துக் கட்டுவதற்கான ஒரு கலகத்திலும் பங்கேற்றிருந்தார்கள் (19:33) - இவை யாவும் பயனற்றவைகளாயிற்று. இப்பொழுது கடைசியாக, அவரைத் தொலைக்கும் வாய்ப்பு ஒன்றை அவர்கள் கண்டார்கள்.*[2]

*அவர்கள், ''எபேசியனாகிய துரோப்பீமு என்பவன் முன்னே நகரத்தில் பவுலுடனேகூட இருக்கிறதைக் கண்டிருந்தார்கள்'' (21:29அ). துரோப்பீமு என்பவர் எருசலேமுக்கு விசேஷ காணிக்கையைக் கொண்டு வந்த பவுலுடன் பயணம் செய்திருந்த புறஜாதியாருள் ஒருவராவார் (20:4). அவர் எபேசுவிலிருந்து வந்தவராகையால், அவரைப் பார்த்தவுடனே ஆசியா நாட்டார் அவர் யார் என்பதை அறிந்திருப்பார்கள். இப்பொழுது அவர்கள், ''பவுல் அவனை தேவாலயத்தில் கூட்டிக் கொண்டு வந்திருப்பானென்று நினைத்தார்கள்'' (21:29ஆ).*

*இது சாவுக்கேதுவான ஒரு யூகமாக இருந்தது ஏன் என்பதைப் புரிந்து கொள்ளுவதற்கு, நாம் தேவாலயத்தின் பல்வேறு உண்மைகளைப் பற்றி அறிய வேண்டும். இவ்வசனப் பகுதியில் "தேவாலயம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள hieron என்ற கிரேக்க வார்த்தையானது தேவாலயத்தின் பரிசுத்தமான பகுதியைக் குறிக்கின்றது. தேவாலய வளாகத்தில் இருந்த, புறஜாதியாரின் மண்டபம் என்று அழைக்கப்பட்ட பகுதி வரையில் மட்டுமே புறஜாதியார் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள், ஆனால் அதற்கப்பால் உள்ளே நுழைய அவர்களுக்கு அனுமதி இல்லாதிருந்தது. புறஜாதியாரின் மண்டபத்திலிருந்து பரிசுத்த மண்டபங்களுக்குச் செல்லும் வாசல் ஒவ்வொன்றிலும் பின்வரும் எச்சரிக்கை இருந்தது: ''மற்ற இனத்தைச் சேர்ந்த[வரான] எவரும் தேவாலயத்தைச் சுற்றிலும் உள்ள வேலி மற்றும் மூடிய பகுதிகளுள் நுழையக் கூடாது, இதற்கு மீறி நடந்து பிடிபடுகிற எவரும் தம்மீது விதிக்கப்படும் மரண தண்டனைக்குத் தம்மையே குற்றம் கூறியாக வேண்டும்." யூதர்களுக்கு மிகப் பெரும் சலுகையாக ரோமர்கள் கொடுத்தது என்னவென்றால், தேவாலயத்தின் பரிசுத்தத்தை*

மீறும் எவரொருவரும், அவர் ரோமக்குடி மகனாகவே இருந்தாலும் கூட, தேவாலய அதிகாரிகளால் அவர் உடனடி யாகக் கொல்லப்படலாம் என்பதேயாகும். புறஜாதியார் ஒருவரைப் பவுல் பரிசுத்த மண்டபங்களுக்குள் அழைத்துச் சென்றிருந்தால், அது மரண தண்டனைக்குரிய குற்றமாகும்.

பவுல் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தினார் என்று ஆசியா நாட்டு யூதர்கள் நினைத்ததற்கோ, அல்லது நாம் அவ்வாறு நினைப்பதற்கோ கூட காரணம் எதுவும் இல்லை. சட்டமியற்று பவர்களைச் சமாதானப்படுத்த முயற்சி செய்யும் மனிதர் எவரும் தாம் ஒரு முட்டாளாய் இருந்தாலன்றி, இப்படிப்பட்ட மதியீனமானவைகளைச் செய்ய மாட்டார் - பவுல் முட்டாள் அல்ல.[3] இருப்பினும், நீங்கள் ஒருவரை வெறுக்கின்ற பொழுது, அவரைப் பற்றி மிக மோசமாய் நினைக்க நீங்கள் தயாராய் இருக்கின்றீர்கள்.




**தேவாலயம்**

''ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் அவனைத் தேவாலயத்தில் கண்டு,'' தங்களின் சக எபேசியனான தெமேத்தி ரியுவின் தந்திரத்தைக் கடன் பெற்று, "ஜனங்களெல்லாரையும் எடுத்து விட்டார்கள்" (வ. 27ஆ).[4] அவர்கள், "அவன்மேல் கை போட்டு, 'இஸ்ரவேலரே, உதவி செய்யுங்கள் ...' என்று சத்தமிட்டார்கள்" (வ. 27இ, 28அ). பவுல் உண்மையிலேயே துரோப்பீமுவைப் பரிசுத்த மண்டபங்களுக்குள் அழைத்துச் சென்ற குற்றம் செய்திருந்தால், அவர்கள் தேவாலயத்துக் காவலர்களைத் தங்கள் உதவிக்கு அழைத்திருக்கலாம். அந்த அலுவலர்கள் பவுலையும், அத்து மீறி நுழைந்த புறஜாதியா ரையும் கைது செய்து உடனடியாகத் தண்டிப்பதற்கு அதிகாரம் பெற்றிருந்தார்கள். இதற்குப் பதிலாக, எபேசுவிலிருந்து வந்திருந்த யூதர்கள், கூட்டத்தின் உதவியைக் கேட்டார்கள் - இது பவுலுக்கெதிரான உண்மைக் குற்றச்சாட்டு எதுவும் அவர்களிடத்தில் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டியது.

பவுலை அவர்கள் அநேகமாக, பெண்களின் மண்டபத்தில் இருந்தவராகக் கண்டிருக்க வேண்டும். அந்த மண்டபத்தின் தென்கிழக்கு மூலையில் நசரேய விரதத்தை நிறைவேற்று கையில் தனி நபர்கள் தங்கியிருக்கக் கூடிய அறைகள் இருந்தன. ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் அப்போஸ்தலரைப் பிடித்துக் கொண்டு, ''நம்முடைய ஜனத்திற்கும்,[5] வேதப் பிரமாணத்திற்கும் இந்த ஸ்தலத்திற்கும் விரோதமாக எங்கும் எல்லாருக்கும் போதித்து வருகிறவன் இவன்தான்; இந்தத் தேவாலயத்திற்குள்ளே கிரேக்கரையும்[6] கூட்டிக்கொண்டு வந்து, இந்தப் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான்'' என்று சத்தமிட்டார்கள் (வ. 28ஆ).[7]

மூன்று விஷயங்கள் யூதர்களுக்குப் பரிசுத்தமானவைகளாய் இருந்தன: அவர்களின் இனம், அவர்களின் வேதவசனங்கள் மற்றும் அவர்களின் தேவாலயம். இவைகளில் முதலாவதைக் கனவீனப்படுத்தியதாகவும், இரண்டாவதை அழித்துப் போட்டதாகவும், மூன்றாவதைத் தீட்டுப்படுத்தியதாகவும் பவுலின் மீது குற்றம் சாட்டப்பட்டது.[8] கடந்து போயிருந்த காலங்களில் இவ்வகைக் குற்றச்சாட்டுகள் யூதர்களுக்கு நன்கு பயன்பட்டிருந்தன; அவைகள் இயேசுவுக்கெதிராகவும் (மாற். 14:56-64; யோவா. 2:19) மற்றும் ஸ்தேவானுக்கு எதிராகவும் (அப். 6:11, 13, 14) பயன்படுத்தப்பட்டிருந்தன. அவ்விரு

*விஷயங்களிலும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தண்டனைக்கு உள்ளானார்கள்.*

*கூட்டம் நிறைந்த தெருக்களில் செய்தியானது காட்டுத் தீயெனப் பரவியது: "அப்பொழுது நகர முழுவதும் கலக்க முற்றது; ஜனங்கள் கூட்டமாய் ஓடி வந்து" (அப். 21:30அ). இதற்கு முந்திய ஒரு பெந்தெகொஸ்தே நாளில், அப்போஸ் தலர்கள் பிரசங்கத்தைக் கேட்பதற்கு எருசலேம் நகரம் முழுவதில் இருந்தும் மக்கள் கூட்டமாகக் கூடினார்கள். இப்பொழுது, இருபத்தேழு ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு அப்போஸ்தலரை இறக்கச் செய்வதைக் காணும்படி மக்கள் தேவாலயத்தினுள் கூட்டமாய் வந்தார்கள்.*

*"பவுலைப் பிடித்து, அவனைத் தேவாலயத்திற்குப் புறம்பே இழுத்துக் கொண்டு போனார்கள்" (வ. 30ஆ) - வேறு வார்த்தை களில் கூறுவதென்றால், அவர்கள் அவரைத் தேவாலயத்தின் பரிசுத்த மண்டபங்களில் இருந்து புறஜாதியாரின் மண்டபத் திற்கு இழுத்துச் சென்றார்கள். இது சபை ஆராதனையின் போது சபையின் உறுப்பினர் ஒருவரை சபை கூடுமிடத்தை விட்டு வெளியே இழுத்துச் செல்லுவதற்கு ஒப்பானதாகும். அவரை அவர்கள், பெண்களின் மண்டபத்திலிருந்து வலிந்து இழுத்துச் சென்றார்கள், ஏனென்றால் அவர்கள் அவரைப் பரிசுத்த இடத்தில் கொலை செய்தால், அவரது இரத்தம் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்திவிடும் (2 இரா. 11:15, 16; 2 நாளா. 24:21 ஆகியவற்றைக் கவனிக்கவும்). ஒன்றுமறியாத மனிதர் ஒருவரை ஒழித்துக்கட்ட அவர்கள் தயங்கவில்லை, ஆனால் உடைமையின் ஒரு பகுதியைத் தீட்டாக்க அவர்கள் விரும்பவில்லை.*

*அவர்களின் செயல்பாடுகளை விளக்கப்படுத்திய பிறகு, லூக்கா பின்வரும் குறிப்பைச் சேர்த்துக் கொடுத்தார்: "உடனே கதவுகள் பூட்டப்பட்டது" (வ. 30இ). ஒருவேளை இந்த வார்த்தைகள் ஒரு விபரத்தைக் கூடுதலாகக் கொடுப்பதற்காகச் சேர்த்திருக்கலாம்; மேலும் தீட்டுப்படுவதைத் தவிர்ப்பதற்காக அல்லது ஆராதிப்பவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாதிருப் பதற்காக தேவாலயத்தின் காவலர்கள், பெண்களின் மண்டபத்துக் கதவுகளை மூடியிருக்கலாம். இருப்பினும், விரிவுரையாளர்களில் பலர் இந்த வார்த்தைகளில் ஒரு தனிச் சிறப்புள்ள அடையாளத்தைக் காண்கின்றார்கள்:*

*லூக்காவுக்கேகூட இவருடைய இரு தொகுதி வரலாற்று நூல்களில் இந்தக் கனம்தான் எருசலேம் தேவாலயமானது தனக்கு ஒப்புவிக்கப்பட்டிருந்த கனத்திற்குரிய பங்கை நிறைவேற்றாது நிறுத்திய வேளையாய் இருந்தது. தேவனுடைய பெயரால் அழைக்கப்பட்ட இடத்திலே தேவனுடைய செய்தியும், தேவனுடைய செய்தியாளரும் ஒதுக்கி நீக்கப்பட்ட விஷயமானது அந்த இடத்தின் அழிவை முத்திரையிட்டது: பல வருடங்களுக்கு முன் இயேசு முன்னுரைத்திருந்த அழிவு இப்பொழுது நடந்தேறுங் காலமாயிற்று (லூக். 21:6).*[9]

*... கதவுகள் பூட்டப்பட்டது என்ற செயலானது சபையில் [உட்பிரிவாய்] இருந்த புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கு இனிமேல் தேவாலயம் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்பதை அடையாளமாய்க் குறிப்பிட்டது. அத்துடன் - கி.பி. 70க்குப் பிறகு - யூதக் கிறிஸ்தவர்களுக்கும் கூட இனி தேவாலயம் முக்கியமல்ல என்பதையும் கூட அர்த்தப்படுத்தியது.*[10]

**சீர்க்குலைந்த ஒரு யூகம்**

*பவுலின் மீது குற்றம் சாட்டப்பட்டபடியாக அவர் குற்றவாளியாயிருந்தால், தேவாலயக் காவலர்களால் அவர் நகருக்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டு, கல்லெறிந்து கொல்லப்பட்டிருப்பார் (அப். 7:58; லேவி. 24:10-14). அதற்குப் பதிலாக, அந்தக் கும்பலானது அவர் மரணமடையும்படி அடிப்பதற்குக் கொடூரமாகவும் மதியீனமாகவும் செயல்படத் தொடங்கியது (அப். 21:32). தேவன் அடியெடுத்து வைத்து தெய்வீகமாக ஒத்திப்போடும்பொழுது பவுல் உயிர் வாழ ஒரு சில நிமிடங்களே எஞ்சியிருந்தது. மார்க்க ரீதியான மக்களை அடக்குவதற்கு மார்க்க ரீதியற்ற வல்லமையைத் தேவன் பயன்படுத்தியது என்பது எதிர் பொருள் உடையதாகும்.*[11] *அவர்கள் அவரைக் கொலை செய்யப் பார்த்தபொழுது, "எருசலேம் முழுவதும் கலக்கமாயிருக்கிறதென்று போர்ச் சேவகரின் சேனாபதிக்கு செய்தி வந்தது" (வ. 31).*

*பொதுவாகப் பலஸ்தீனமும், குறிப்பாக எருசலேமும், ரோமக்குடியேற்றப் படைகளுக்குப் பெரியதொரு தலைவலியாகவே இருந்தன. அந்தப் பகுதியை ஆளும் சிலாக்கியம்*

*என்பது சீறிப் பொங்கும் எரிமலையின் மீது உட்காருவதுடன் ஒப்பிடப்படலாம். நூறாயிரக்கணக்கான யூதர்கள் முக்கிய மான பண்டிகை நாட்களில் எருசலேமில் கூடி வந்திருக்கும் பொழுது, மற்ற ஒருபொழுதிலும் இராத அளவுக்குக் கொதிக் கும் சூழ்நிலை நிலவியதுண்டு. அப்படிப்பட்ட வேளைகளில், கலகத்தை எதிர்கொள்ளத் தயாராக, கூடுதல் படைகள் நகரில் வந்து குவிக்கப்படுவதுண்டு.*

*அந்தப் படைகள் தேவாலயத்தின் வடமேற்கு மூலையில் இருந்த அந்தோனியோ கோட்டையில் முகாமிட்டிருந்தார்கள். யூதர்களின் பழைய கோட்டையாயிருந்த இது பெரிய ஏரோதினால் மறுபடியும் கட்டுவிக்கப்பட்டு, ஏரோதுவின் ரோம நண்பரும் புரவருமான மாற்கு அந்தோனியைக் கனப் படுத்தும் வகையில் மறுபெயரிடப்பட்டிருந்தது. தேவாலயத் தின் உயரத்திற்கும் மேலாகக் கோபுரமெழுப்பப் பட்டிருந்த இக்கோட்டை ஐம்பதடி உயரம் உள்ளதாய் இருந்தது - அதன் காவற் கோபுரங்கள் அதற்குமேல் ஐம்பதடி உயரம் இருந்தன. தேவாலயத்தின் எல்லாப் பகுதிகளையும், நகரத்தின் பெரும் பகுதியையும் காவல்காரர்கள் அங்கிருந்து கண்காணித்து ஆராய முடியும்.*

*பாதுகாப்பிற்குப் பொறுப்பாயிருந்த உள்ளூர் அதிகாரி கிலவுதியு லீசியா என்பவராவார் (23:26), இவர் ஒரு ஆயிரத் திற்கு அதிபதியாவார். அந்த நாளில் அவர் தாம் கேள்விப்பட்ட செய்தியைக் குறித்து மிகவும் பயமடைந்தார்: "எருசலேம் முழுவதும் கலக்கமாயிருக்கிறது!"[12] கோட்டையானது இரண்டு படி வரிசைகளினால் தேவாலயத்தின் வெளிமண்டபத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. அவர் விரைவான கட்டளைகள் கொடுத்தபடியே, படிகளில் அவசரமாய் இறங்கிச் சென்றார். "உடனே அவன் போர்ச் சேவகரையும் அவர்களுடைய அதிபதிகளையும் கூட்டிக் கொண்டு, அவர்களிடத்திற்கு ஓடினான்" (21:32அ).*

*பல நூற்றுக்கணக்கான படை வீரர்களை[13] கண்ட கணத்தி லேயே கூட்டமானது உறைந்து போயிற்று: "சேனாதிபதி யையும் போர்ச் சேவகரையும் அவர்கள் கண்டபோது பவுலை அடிக்கிறதை விட்டு நிறுத்தினார்கள்" (வ. 32ஆ). கலகத்தை அடக்குவதில் பயிற்சி பெற்றிருந்த கிலவுதியு, சூழ்நிலையைத் தக்க விதத்தில் கணித்தார். கோபம் மிகுந்த அக்கூட்டமானது*

*அடித்து வீழ்த்தப்பட்டு இரத்தம் சிந்திய ஒரு மனிதரை நோக்கியிருந்ததை அவர் கண்டார். விரைவிலேயே அவர், ''கிட்ட வந்து அவனைப் பிடித்து'' (வ. 33அ), பவுலைப் பாதுகாப்பதற்காக அல்லாது, கலகத்தை அமர்த்துவதற்காகவே அதைச் செய்தார்.[14] கலகத்திற்கு அந்த மனிதர் (பவுல்) தான் காரணமாய் இருக்க வேண்டும் என்ற யூகத்தில், ''இரண்டு சங்கிலிகளினாலே [பவுலைக்] கட்டும்படி'' (வ. 33ஆ) தமது இரண்டு சேவகர்களுக்குச் சொன்னார். எருசலேமில் பவுலுக்குக் கட்டுகள் காத்திருக்கின்றன என்ற தீர்க்கதரிசனத்தை (20:22, 23; 21:10, 11) இந்த நிகழ்ச்சியானது நிறைவேற்றியது.[15]*

*நடந்த நிகழ்ச்சியைக் குறித்து தாம் அறிக்கை அனுப்ப வேண்டும்[16] என்று அறிந்திருந்த சேனாதிபதி, "இவன் யார் என்றும் என்ன செய்தான் என்றும் விசாரித்தான்" (21:33இ)[17] - இது கூட்டத்தின் சீர்குலைந்த யூகத்தை நமக்குக் கொண்டு வருகின்றது: "அதற்கு ஜனங்கள் பலவிதமாய்ச் சத்தமிட்டார்கள்" (வ. 34அ).[18] பவுல் என்ன குற்றம் சாட்டப்பட்டிருந்தார் என்பதைப் பெரும்பாலானோர் அறியாதிருந்தார்கள், ஆனால் அப்படிப்பட்ட ஒரு கிளர்ச்சிக்குக் காரணமாயிருப்பது பயங்கரமானது என்று அவர்கள் யூகித்தார்கள். "புகையிருக்கும் இடத்தில் நெருப்பிருக்கும்'' என்ற பழமொழியை அவர்கள் ஒப்புக் கொண்டிருந்திருப்பார்கள்.*

*உபயோகமான எதையும் அந்த அதிகாரி கண்டறியப் போவதில்லை என்பது விரைவிலேயே தெளிவாயிற்று. "சந்தடியினாலே நிச்சயத்தை அவன் அறியக் கூடாமல்,[19] அவனை [பவுலை]க் கோட்டைக்குள்ளே கொண்டு போகும்படி கட்டளையிட்டான்" (வ. 34ஆ). அங்கு அவர் சிறையில் இடப்பட்டு விசாரிக்கப்பட முடியும். பவுல் இப்பொழுது, ரோமாபுரியின் கைதியாக இருந்தார்; இதுமுதல் நடபடிகளின் முடிவுப் பகுதி வரையிலும் அவர் ஒரு கைதியாகவே இருப்பார்.*

*பவுலைக் காவல் செய்தவர்கள் படிகளில் ஏறிச் சென்றபொழுது, கொலைகாரக் கும்பலானது தங்கள் இரை தப்பிச் சென்றதைக் கண்டு, வன்முறைக்குத் திரும்பியது. எச்சரிக்கையடைந்த சேவகர்கள் பவுலைத் தூக்கிக் கொண்டு[20] கூட்டத்தைப் பிளந்து செல்ல வேண்டியதாயிற்று (வ. 36). மக்கள் கூட்டமானது "இவனை அகற்றும்'' (வ. 36அ) என்று கோஷமிடத் தொடங்கியது. அவர்கள், "இப்படிப்பட்டவனை ... அகற்ற*

*வேண்டும்; இவன் உயிரோடிருக்கிறது நியாயமல்ல" (22:22ஆ) என்று அர்த்தப்படுத்தினார்கள். அந்த இடத்திலிருந்து ஒரு சில அடிகள் தள்ளி வேறொரு கும்பலானது இயேசுவின் மரணத்தைக் கோரி அதே வார்த்தைகளைப் பயன்படுத்தியிருந்தது![21]*

**ஐயத்திற்கிடமான ஒரு யூகம்**

*படிகளின் உச்சியை அவர்கள் அடைந்த பொழுது, அந்த அப்போஸ்தலர் முதன்முறையாகப் பேசினார். "அவர்கள் பவுலைக் கோட்டைக்குள்ளே கொண்டு போகிற சமயத்தில் அவன் சேனாபதியை நோக்கி: 'நான் உம்முடனே ஒரு வார்த்தை பேசலாமா' என்றான்" (வ. 37அ). குழப்பத்தின் மத்தியில், ஒருவர் அமைதியாய் இருந்திருந்தார்[22] - அவர் தமது இரத்தத்தினாலேயே மூடப்பட்டிருந்தார். இராணுவ ஒழுங்கைக் கடைப் பிடித்து, அவர் பேசுவதற்கு அனுமதி கேட்டார்.*

*பவுல் பேசியதைக் கேட்ட அதிகாரி திகைப்படைந்தார். "உனக்குக் கிரேக்க பாஷை தெரியுமா?" (வ. 37ஆ). பவுலின் கிரேக்க வார்த்தைகள் அவரை ஏன் ஆச்சரியமடையச் செய்தன என்பதைப் பற்றி நாம் நிச்சயமாக அறிய முடிவதில்லை. கிரேக்க மொழியானது அந்நாட்களில் உலகளாவிய ஒரு மொழியாக இருந்ததால் யூதர்கள் பொதுவாகக் கிரேக்க மொழியில் பேசுவதுண்டு. ஒருவேளை அந்த அதிகாரி பேசிய அளவுக்கு தரமற்ற கிரேக்க மொழியைப் பவுல் பேசாதிருந்திருக்கலாம்; பவுலின் வார்த்தைகள் கல்வி கற்ற மனிதருடைய வார்த்தைகளாய் இருந்தன.*

*பிறகு அந்த அதிகாரி தமது சொந்த யூகத்தை வெளிப்படுத்தினார்: "நீ இந்த நாட்களுக்கு முன்னே கலகமுண்டாக்கி, நாலாயிரங்[23] கொலை பாதகரை[24] வனாந்திரத்திற்குக் கொண்டு போன எகிப்தியன் அல்லவா என்றான்" (வ. 38). யூத வரலாற்றாளரான யோசிப்பஸ் அவர்களின் கூற்றுப்படி, ஏறக்குறைய மூன்று வருடங்களுக்கு முன்னதாக, தன்னை மேசியா என்று உரிமைகோரிக் கொண்ட ஒரு மனிதர் (மத். 24:26; அப். 5:36, 37ஐக் கவனிக்கவும்), ஒரு படையை ஒலிவ மலையுச்சிக்கு வழி நடத்திச் சென்றிருந்தார். எரிகோவின் மதில்களைப் போலவே எருசலேமின் மதில்களைத் தாம் இடித்துத் தள்ளப் போவதாகவும் அதன் பிறகு அந்நகரை*

ரோமரிடமிருந்து தாம் பற்றியிழுக்கப் போவதாகவும் அவர் பயமுறுத்தியிருந்தார். பேலிக்ஸ் என்ற ரோம ஆளுநர் அந்த வன்முறையாளர்களைத் தாக்கியிருந்தார். நானூறு பேர் கொல்லப்பட்டு, இருநூறு பேர் பிடிக்கப்பட்டிருந்தார்கள், ஆனால் அந்த எகிப்தியன் தப்பிச் சென்றிருந்தார். அந்த நாள் தொடங்கி ரோமானியர்களால் ''தேடப்பட்டவர்களின்'' பட்டியலில் அவர் முதலிடத்தைப் பெற்றிருந்தார். அந்தக் கலகக்காரரே தமது கையில் பிடிபட்டிருப்பதாக அந்த அதிகாரி நினைத்தார் என்பது உறுதியாகும்.

அதிகாரிகள் தேடிக் கொண்டிருந்த அந்த மனிதர் தாமல்ல என்பதைப் பவுல் விரைவாக உறுதிப் படுத்தினார்: "அதற்குப் பவுல்: 'நான் சிலிசியா நாட்டிலுள்ள கீர்த்திபெற்ற தர்சுப் பட்டணத்து யூதன்' " (அப். 21:39அ)[25]. யூதர் என்ற வகையில் அவர் தேவாலயத்தினுள் செல்லும் உரிமை பெற்றிருந்தார். தர்சு கலாச்சாரம் மற்றும் அரசியல் ஆகியவற்றில் முன்னணியில் இருந்த - பட்டணத்தார் என்ற வகையில் அவர் கலகத்தைத் தூண்டுபவராய் இராமல் பொறுப்புள்ள ஒரு தனி நபராக இருந்தார்.

பிறகு, பவுல் கேட்ட ஒரு கோரிக்கையானது அந்த அதிகாரியைத் திகைப்படையச் செய்திருக்க வேண்டும்: "ஜனங்களுடனே பேசும்படி எனக்கு உத்தரவாக வேண்டுமென்று உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான்'' (வ. 39ஆ). நமது அடுத்த பாடத்தில் நாம் பவுல் படிகளின்மேல் நின்று (வ. 40), கீழேயிருந்த கட்டுக்கடங்காத கூட்டத்தினரை நோக்கிப் பேசியவற்றைக் காண்போம். இப்பொழுது ஒரு கணம் நாம் அபாயமான யூகங்களைப் பற்றிய நமது சொந்தப் பயன்பாட்டுக்குக் கடந்து செல்வோம்.

## இன்றைய நாட்களின் அபாயமான யூகங்கள்

தவறான யூகங்கள் செய்வதில் ஆசியாவின் யூதர்கள், கும்பல் மற்றும் ரோம அதிகாரி ஆகியோர் முதலாவதானவர்கள் அல்ல. மரியாளும் யோசேப்பும், "அவர் [இயேசு] பிரயாணக்காரரின் கூட்டத்திலே இருப்பாரென்று அவர்கள் நினைத்து, ஒரு நாள் பிரயாணம் வந்து" (லூக். 2:44அ) அவர் தங்களுடன் இல்லா

*திருந்ததைக் கண்டனர். பெந்தெகொஸ்தே நாளன்று சிலர், அப்போஸ்தலர்களே மதுபானத்தினால் நிறைந்திருந்ததாக யூகித்தனர் (அப். 2:15). பூமியதிர்ச்சியினால் சிறைச்சாலைக் காரர் எழுப்பப்பட்டபோது, ''கட்டுண்டவர்கள் ஓடிப் போனார்களென்று எண்ணி, பட்டயத்தை உருவித் தன்னைக் கொலை செய்து கொள்ளப் போனான்" (அப். 16:27ஆ).*[26]

*அந்த யூகங்கள் எல்லாம் எவ்வளவு அழிவுக்குரியவைகளாய் இருந்தனவோ, அதே அளவுக்குப் பின்வரும் யூகங்களும் கவலையளிப்பவைகளாக இருக்கின்றன: சிலர் தங்களின் மதப் பின்னணியினால் இரட்சிக்கப்படலாம் என்று யூகிக்கின் றார்கள் (மத். 3:9); சிலர் ''தேவபக்தியை ஆதாயத் தொழி லென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிறார்கள்'' (1 தீமோ. 6:5ஆ); சிலர் தாங்கள் சில குற்றம் செய்து கொண்டே, அதே வகையான குற்றம் செய்தவர்களை நியாயந்தீர்த்து, தாங்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக் கொள்ளலாம் என்று யூகிக்கின்றார்கள் (ரோமர் 2:3).*

*யூகம் செய்தல் என்பது முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர் களுடன் இறந்து விடவில்லை. அபாயமான யூகங்கள் இன்றைய நாட்களிலும் அளவில்லாது இருக்கின்றன.*

## கொள்கைகளுடன் தொடர்புடைய யூகங்கள்

*மத உலகத்தின் விசேஷ கவனத்திற்குரிய பல முன் அநுமானங்கள் இருக்கின்றன. சில வருடங்களுக்கு முன்பாக, இதைப் பற்றி பாபி டன்கன் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *... ''விசுவாசத்தினால் மட்டும் இரட்சிப்பு'' என்ற உபதேசமானது, ஒருவர் வாசிக்கின்ற பின்வரும் உண்மை யால் வளர முடியும் ... விசுவாசத்தினால் இரட்சிப்பு எனக் கூறும் வசனப் பகுதிகள் பலவற்றில் ஏதாவது ஒன்றை மட்டும் வாசித்து விட்டு, அக்கருத்தைக் கையாளும் மற்ற வசனப் பகுதிகளைக் கவனிக்காமல், விசுவாசம் மட்டுமே இரட்சிப்புக்குப் போதுமானதென்ற முடிவுக்குத் தாவுகின்றார். ஒருவர், "விசுவாசம் என்பது கிரியைகளின் படியானதல்ல" என்ற வசனப் பகுதியைப் படித்து விட்டு, இரட்சிக்கப்படுவதற்கு ஒருவர் எதுவும் செய்யத் தேவையில்லை/முடியாது என்ற முடிவுக்குத் தாவி*

*விடலாம். அவர், பாவிகள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்படுவதைப் பற்றி வாசிக்கலாம், பிறகு அவர்கள், சபை என்பது தேவையற்ற ஒரு நிறுவனம் என்ற முடிவுக்குத் தாவி விடலாம்.*

*[அவர்], ‘‘கிறிஸ்து ஒவ்வொரு மனிதருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்’’ என்று வாசிக்கலாம், பிறகு எல்லா மக்களும் இரட்சிக்கப்படுவார்கள் என்ற முடிவுக்குத் தாவி விடலாம். “கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்” என்ற வசனப் பகுதியை அவர் வாசிக்கலாம், பிறகு புறம்பே இருக்கிற யாவரும், பாவ மன்னிப்புக்காக ஜெபிக்க வேண்டும் என்ற முடிவுக்கு அவர் தாவி விடலாம். விசுவாசிக்கிறவர்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவதில்லை என்ற வசனப் பகுதியை அவர் வாசிக்கலாம், பிறகு அவர், கிறிஸ்தவர்கள் கிருபையினின்று விழுவதற்குச் சாத்தியமில்லை என்ற முடிவுக்குத் தாவி விடலாம் ... இந்தத் தவறான உபதேசங்கள் யாவும், ஒரு முடிவுக்கு வரும்முன், எல்லா உண்மைகளையும் கவனிப்பதினாலேயே தவிர்த்து விடப்பட முடியும் ... ஒரு பாடக் கருத்தைப் பற்றி வேதாகமம் கூறும் எல்லா சத்தியங்களையும் அறியாத வரையில் ஒருவரிடத்தில் சத்தியம் நிலை நிற்பதில்லை.*

### மக்களுடன் தொடர்புடைய யூகங்கள்

*இருப்பினும், நம்மில் பலருடைய வாழ்க்கையில், மற்றவர்களைப் பற்றி நாம் நினைக்கின்ற யூகங்களே மிகுந்த அபாய முள்ளவைகளாய் இருக்கின்றன. ஒருமுறை ஒரு மனிதர் தமது நாற்காலியில் அமர்ந்து கொண்டே தமது தோட்டத்தில் களை பறித்துக் கொண்டிருந்தார். அங்கு கடந்து சென்ற ஒரு மனிதர், “இவர் மகா சோம்பேறியான மனிதராய் இருப்பார் போலிருக்கிறதே!’’ என்று நினைத்தார். பின்பு அவர் அம்மனிதரின் நாற்காலிக்கருகில் முடவரின் ஊன்றுகோல்கள் ஒரு ஜோடி யிருப்பதைக் கண்டார் - அவருடைய முகம் உடனே சிவந்து போயிற்று.[27]*

*“யூகங்கள்” என்று தலைப்பிடப்பட்ட கட்டுரையொன்றில், கிறிஸ் ஸ்மித் அவர்கள், நம்முடைய யூகத்திற்கும் உண்மைக்கும் இடையில் பெரும்பிளவு ஒன்று இருப்பதைக் கவனத்திற்குக்*

கொண்டு வந்தார்:

> *நமது தகவல்கள் சரியானவை என்று யூகித்து, பின்னால் அவை தவறானவை என்று கண்டறிந்த நிகழ்ச்சி எவ்வளவோ பெரும்பாலான சமயங்களில் நடக்கின்றது அல்லவா?*
>
> *யூகம்: "அவள் மற்ற ஒவ்வொருவரைக் காட்டிலும் தான் சிறந்தவள் என்று எண்ணுகின்றாள்." உண்மை: அவள் நாணமுடையவளாயிருக்கிறாள், தனக்கு அதிக மான நண்பர்கள் இருக்க வேண்டும் என்று விரும்பு கிறாள், மற்றும் தனக்கு ஏன் அவ்வளவு நண்பர்கள் இல்லை என்று ஆச்சரியப்படுகிறாள்.*
>
> *யூகம்: "அதைப் பற்றி மூப்பர்கள் ஒன்றுமே செய்ய வில்லை!" உண்மை: அதைப் பற்றி மூப்பர்கள் இரண்டு கூட்டங்கள் நடத்தினார்கள், அதிகமாய் ஜெபித்தார்கள், முடிந்த அளவு மிகச் சிறந்த தீர்மானம் செய்தார்கள். இரகசியத்தை மதித்ததினால் அதை ஒருவருக்கும் கூறாதிருந்தார்கள்.*
>
> *யூகம்: "வில்மா உண்மையிலேயே கலக்கமடைந்தாள்! அவள் வில்பரிடம் கூறி, அந்த வில்பர் ஜோஸப்பினிடத் தில் கூற, ஜோஸப்பைன் என்னிடத்தில் கூறினாள் ..." உண்மை: யார் அறிவார்?! வில்மாவிடம் கேளுங்கள்.*
>
> *நமது தகவலை எப்பொழுதுமே இருமுறை பரிசோதிக்க முடியுமா? ஒருவேளை அது முடியாமல் போகலாம். இது அதிக நேரம் எடுத்துக் கொள்ளக் கூடியதாகின்றது. யூகங்கள் மேற்கொள்வதில் நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டுமா? மக்களைப் பற்றியதாய் இருக்கும்போது இது முழுமையாகச் சரியானதேயாகும்! முழுமையற்ற தகவல்கள், பாதி உண்மைகள் மற்றும் வீண் பேச்சுகள் ஆகியவற்றால் அழிக்கக் கூடாத அளவுக்கு ஒரு நபருடைய நன்மதிப்பு என்பது விலையேறிய பொருளாய் இருக்கின்றது.*[28]

*பவுலின் விஷயத்தில் இருந்த உண்மைகளைக் கண்ட பொழுது, ரோம அதிகாரி திகைப்படைந்தார். ஒவ்வொரு நாளும் மற்றவர்கள் கையாள வேண்டியவைகளைப் பற்றி அறிந்தால் நாமும் கூட திகைப்படைய நேரிடும். "மக்கள் சுமக்கும் சிலுவைகள் கண்ணுக்குத் தென்படுவது அரிது!"*[29] *என்று யாரோ ஒருவர் எழுதியிருக்கின்றார்.*

*நீண்ட நாட்களுக்கு முன்பு, இயேசு, "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று கூறினார் (மத். 7:1, 2). என்னைப் பற்றி மிகச் சிறந்த முறையிலேயே மக்கள் நம்ப வேண்டும் என்று நான் விரும்புகிறேன், நீங்கள் அவ்விதம் விரும்புவதில்லையா? அப்படியிருந்தால், மற்றவர்களின் செயல்பாடுகள்மீது நான் எப்பொழுதுமே மிகச் சிறந்த கட்டமைப்பைத் தர வேண்டியது தேவையாகும் (1 கொரி. 13:7) - நீங்களும் இதைச் செய்ய வேண்டும்.*

## முடிவுரை

*அப். 21:27-40ன் காட்சிகளை நான் காணுகையில், இருவகைப்பட்ட மனிதர்களைக் காணுகின்றேன்: குழப்பமடைந்தவர்கள் மற்றும் ஒப்புக் கொடுத்தவர்கள். ஆசியாவின் யூதர்கள், கும்பல் மற்றும் ரோமத் தளபதி - இவர்கள் யாவரும் குழப்பமடைந்தவர்களாய் இருந்தார்கள். இதற்கு மாறாக, பவுல் ஒப்புக் கொடுத்தவராக - சூழ்நிலைகள் எதுவாயிருந்தாலும், கர்த்தருக்குத் தம்மை ஒப்புக் கொடுத்தவராகவே இருந்தார். நீங்கள் இதில் எந்த வகையைச் சேர்ந்தவர்களாய் இருக்கின்றீர்கள்? நீங்கள் குழப்பமடைபவராயிருந்தால் உங்கள் சிந்தனை சீராகும்படி நான் ஜெபிக்கின்றேன் - பிறகு நீங்கள் உங்களைப் படைத்தவருக்கு உங்களை முடிந்த அளவு விரைவில் ஒப்புக் கொடுக்க வேண்டும் என்றும் நான் ஜெபிக்கின்றேன். எவரொருவரும் என்ன கூறினாலும் அதைப் பொருட்படுத்தாமல், கர்த்தருக்காக நிற்கக் கூடிய மக்களுக்காகக் கர்த்தர் இப்பொழுதே தமது பயன்பாட்டை மேற்கொள்கின்றார்!*

---

குறிப்புகள்

*[1]பெந்தெகொஸ்தே பண்டிகை என்பது ஒரு நாள் பண்டிகையாயிருந்தது, ஆனால் தூர இடங்களிலிருந்து வந்தவர்கள் அந்த ஒரு நாளுக்கு அப்பாலும்*

எருசலேமில் தங்குதலை நீட்டித்தார்கள். [2]அநேகமாக அக்கூட்டத்தில் கலாத்தியா, மக்கெதோனியா மற்றும் அகாயாவில் இருந்து வந்த யூதர்களும் - இவ்விடங்கள் யாவும் யூதர்கள் பவுலைக் கொலை செய்ய முயன்ற இடங்களாகும் - உள்ளடங்கி யிருப்பார்கள். ஆசியாவில் இருந்து வந்த யூதர்கள் இதைத் தூண்டியிராதிருந்தால், அநேகமாக, மற்ற பகுதியிலிருந்து வந்திருந்த யூதர்கள் இதைப் போன்ற எதையாவது செய்திருப்பார்கள். இந்த நோக்கத்திற்காகவே சிலர் பவுலைத் தொடர்ந்து எருசலேமுக்கு வந்திருக்கவும் வாய்ப்பு உண்டு. [3]துரோப்பீமு, பரிசுத்த மண்டபங்கள் ஒன்றினுள் கவனக் குறைவாகத் திரிந்திருக்கலாம் என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். I. ஹோவர்டு மார்ஷல் அவர்கள், "துரோப்பீமு தன்னிஷ்டப்படி, தடை செய்யப்பட்ட பகுதியில் அலைந்து திரிந்திருப்பார் என்ற சாத்தியக்கூறு ஏற்புடையதல்ல, ஏனென்றால் இது கிரெம்ளினில் உள்ள தனியார் அறைகளுக்குள் சுற்றிப்பார்க்கும் நோக்கத்திற்காக ஒருவர் அலைந்து திரிவது முடியாது என்பதைப் போன்றதேயாகும்." [4]எபேசுவில் அரங்க சாலையில் அமளியைத் தூண்டிவிட்ட அலெக்சந்தரும், மற்ற யூதர்களும் (19:33, 34) எருசலேமில் இந்த கலகத்தைத் தூண்டி விட்டிருக்கலாம் என்ற ஒரு கருத்து நிலவுகின்றது. அப்படியிருந்தால் அவர்கள் அச்செயலைத் தெமேத்திரியு மற்றும் மற்ற வெள்ளிச் சிற்பாசாரிகளிடமிருந்து நன்றாய் கற்றிருந்தார்கள். [5]கிரேக்க வசனத்தில் "ஜனத்திற்கும்" என்று மட்டுமே காணப்படுகின்றது (KJV மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பில் காணவும்), ஆனால் ஒரு யூதரால் இச்சொற்றொடர் பயன்படுத்தப்படுகையில் அது "யூதர்களையும்" என்று அர்த்தப்படுவதாகவே இருக்கும், ஆகையால் NASBயில் "நமது ஜனங்களையும்" (our people) என்று உள்ளது. [6]ஒரு மனிதர் (துரோப்பீமு) என்பவர், "கிரேக்கர்" (பன்மை) என்று பெருக்கப்பட்டிருந்ததைக் கவனியுங்கள். நசரேய விரதமிருந்த நால்வரும் கூடப் புறஜாதியார்கள் என்று ஆசியாவின் யூதர்கள் யூகித்திருந்தார்களா? [7]சரியான குற்றச்சாட்டுகளைச் சிந்தையில் வையுங்கள். பிற்பாடு பவுல் யூதர்களின் குற்றச்சாட்டுகளை அவர்கள் நிரூபிக்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார் (24:19). [8]பவுல் சுத்திகரிப்புச் சடங்கிற்கென்றே தேவாலயம் சென்றிருந்ததால் அவர் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தியிருக்க வாய்ப்பில்லை. இப்படியிருக்க, பவுல் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தினார் என்று குற்றம் சாட்டுவது முரண்பாடானதாக இருந்தது. [9]F. F. Bruce, *The Book of Acts*, rev. ed. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 410. [10]Simon J. Kistemaker, *New Testament Commentary: Exposition of the Acts of the Apostles* (Grand Rapids, Mich.: Baker Book House, 1990), 770.

[11]யூதர்களின் கூட்டத்திலிருந்து பவுலைக் காப்பாற்ற தேவன் ரோமர்களைப் பயன்படுத்தியது இது இரண்டாம் தடவையாகும் (18:12-17ஐக் கவனியுங்கள்). தேவைப்பட்டால் இவ்விடத்தில், ஒன்றுமறியாதவர்களைப் பாதுகாப்பதென்பது குடிகளின் அரசாங்கத்தினுடைய கடமையாகும் என்ற கருத்தை (ரோமர் 13:3, 4) இவ்விடத்தில் குறிப்பிடலாம். [12]தலைச் சவரம் பண்ணிக் கொண்டு, பவுலுடன் இருந்திருந்த மனிதர்களில் ஒருவர் அல்லது சிலரிடம் இருந்து இச்செய்தி வந்ததென்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இருப்பினும், "ஒன்றுமறியாத மனிதர் ஒருவரை அவர்கள் கொல்லுகின்றார்கள்" என்ற வார்த்தை கூறப்படவில்லை, அதற்கு மாறாக, "எருசலேம் முழுவதும் கலக்கமாயிருக்கிறது" என்று மட்டுமே வார்த்தை கூறப் பட்டது. எனவே இவ்வார்த்தை அநேகமாக, கோபுரங்களில் காவல் காத்தவர்கள் மூலமாகவே வந்திருக்க வேண்டும். [13]சேனாதிபதி தம்முடன் குறைந்தது இரண்டு நூற்றுக்கதிபதிகளையாவது கூட்டிச் சென்றார், நூற்றுக்கதிபதி ஒருவர் நூறு சேவகர்களுக்குப் பொறுப்பாளியாகையால், குறைந்தது இருநூறு சேவகர்களாவது செயல்பட அழைக்கப்பட்டிருப்பார்கள். [14]சேனாதிபதி பிற்பாடு கொடுத்த அறிக்கையானது தெரிந்து கொண்டதற்கும் அப்பால் உண்மையை நீட்டித்துக்

*கொடுத்தது (23:26, 27ஐக் காணவும்). [15]மேலும், இது அவர் புறஜாதியார் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படுவார் என்ற தீர்க்கதரிசனத்தையும் நிறைவேற்றியது (21:11). [16]அதிகாரவர்க்கத்தின் ஆட்சியில் காகிதப்பணி என்பது எப்பொழுதுமே முக்கியத்துவமாய் இருந்துள்ளது. அவர் நிறைவாக எழுதிய அறிக்கையை 23:25-30ல் காணுங்கள். பவுல் என்ன செய்திருந்தார் என்று அறிவது மிகவும் முக்கியமான தாயிருந்தது, ஏனென்றால் ரோமர்களின் சட்டத்தின்படி, ரோமக்குடிமகன் ஒருவருக்கெதிரான குற்றச்சாட்டுகளை விசாரியாமல், அவரைப் பிடித்து வைக்க முடியாது. 25:26, 27ஐக் காணவும். [17]மூலபாஷையில் அவர் மறுபடி மறுபடி கேட்டார் என்பது சுட்டிக்காட்டப்பட்டது. [18]19:32 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். [19]கிளர்ச்சியைத் தொடங்கியவர்கள் இன்னமும் அங்கிருந்திருந்தால், ஒன்று அவர்கள் பேசாமல் இருந்திருந்தார்கள் அல்லது கூட்டத்திற்கு மேலாக அவர்கள் பேசியதைக் கேட்க முடியாதிருந்தது. சேவகர்கள் நெருங்குவதைக் கண்டபோது அவர்கள் நழுவிச் சென்றிருக்கலாம் என்ற கருத்து கூறப்படுகின்றது. [20]ஒருவேளை பவுல் தமது பலவீனமான நிலைமையில், சேவகர்கள் விரும்பிய அளவு வேகமாய் நடக்காது இருந்திருப்பார், அல்லது ஒருவேளை கூட்டத்தால் பிடிக்க முடியாதபடி பவுலை அச்சேவகர்கள் உயரே தூக்கிப் பிடித்திருப்பார்கள்.*

*[21]லூக்கா 23:18; யோவான் 19:15. இவை யாவும் நடைபெற்ற போது "யூதர்களுக்குள் அநேகமாயிரம் பேர் விசுவாசிகளாயி"ருந்தவர்கள் (21:20) எங்கு இருந்தார்கள் என்று நான் வியப்படைகின்றேன். விசேஷமாக தலைச்சவரம் பண்ணப்பட்ட நால்வரும் எங்கிருந்தார்கள் என்று வியப்படைகிறேன். இது, கர்த்தரைத் தவிர மற்ற யாவரும் பவுலைக் கைவிட்டு விட்ட இன்னொரு நிகழ்ச்சியாகக் காணப்படுகின்றது (2 தீமோ. 4:16, 17ஐக் காணவும்). [22]இந்த நிகழ்ச்சி களை, கல்லெறிவதற்காக ஸ்தேவானைச் சூழ்ந்து நின்றவர்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள் (''அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 2'' இதழில் உள்ள குறிப்புகளைக் காணவும்). கொலை செய்யப்படத் தாம் உடன்பட்டிருந்த அந்த மனிதரிடமிருந்து பவுல் கற்றிருந்தாரா? [23]அந்த எகிப்தியன் 30,000 மனிதர்களை ஒலிவமலையின் உச்சிக்கு வழி நடத்திச் சென்றதாக யோசிப்பஸ் கூறினார். யோசிப்பஸ் மற்றும் சேனாதிபதி ஆகியோர் வேறுபட்ட இரு நிகழ்ச்சிகளைப் பற்றி பேசியதால் இந்த எண்ணிக்கை வேறுபாடு வந்திருக்கலாம். ஒருவேளை இதில் முரண்பாடு இருக்குமென்றால், யோசிப்பஸ்ஸைக் காட்டிலும் சேனாதிபதி கூறியதே சரியாயிருந்திருக்கும், ஏனெனில் அவர் மிகைப் படுத்திக் கூறுவதில் அச்சம் கொண்டவராவார். [24]சேனாதிபதி கூறியதன் நேரடி அர்த்தம்,* "four thousand men of the Sicarii" *என்பதாகும்.* "Sicarii" *என்ற வார்த்தை "குத்துவாள் - மனிதர்" என்று அர்த்தப்படுகின்றது, இது "குறுவாள்" என்று அர்த்தம் தரும் sica என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து வருகின்றது.* Sicarii *என்பவர்கள் (*NASB *சுட்டிக்காட்டுவது போல) கொலைகாரர்கள் ஆவார்கள் (*KJV*யிலும், தமிழ் மொழிபெயர்ப்பிலும் "கொலை பாதகர்கள்" என்றுள்ளது; எருசலேம் வேதாகமத்தில் "தொண்டையை அறுப்பவர்கள்"* cutthroats *என்றுள்ளது). அவர்கள் பண்டிகை நாட்களில் ரோம அதிகாரிகளை நெருங்குவதற்காக கூட்டத்துடன் கலந்து விரவியிருப்பார்கள். தங்கள் எதிரிகள் கழுத்தில் குத்துவாளை இரகசியமாய்ப் பாய்ச்சி விட்டு, பயமடைந்த கூட்டத்துடன் கலந்து விடுவார்கள். அவர்கள் யூதர்களின் பொதுக் கலகக் கும்பலின் ஒரு பகுதியாகவும், இதன் விளைவாக எருசலேம் அழியக் காரணமானவர்களுமாய் இருந்தார்கள். [25]பவுல், தாமும் ஒரு ரோமக்குடிமகன்தான் என்பதை இவ்விடத்தில் குறிப்பிடாதிருந்தார் (22:5ஐக் கவனியுங்கள்). அந்தக் காலத்தில், ஒருவர் தமது உள்ளூர்க் குடியுரிமை மற்றும் ரோமக்குடியுரிமை என்று இரட்டைக் குடியுரிமையுடையவர்களாய் இருக்க முடிந்தது. [26]வேதாகமத்தில் இவைகளைப்*

*போன்ற மற்ற யூகங்களுக்கு, ஒரு எடுத்துக்காட்டுகளை, மாற். 6:49; லூக். 12:51; 13:2, 4; 19:11; யோவா. 11:31; 13:29; 20:15; அப். 14:19; 27:13 ஆகியவற்றில் காணவும்.*
[27]*இந்த விளக்கமானது* "Old Paths" (March 1995) *என்ற நூலுக்குரிய* "An Unnecessary Exercise" *என்று தலைப்பிடப்பட்ட அறிக்கையொன்றிலிருந்து எடுக்கப்பட்டது.*
[28]Duncanville *கிறிஸ்துவின் சபை* (Duncanville, Texas) *யின் 1995ன் தொடக்க அறிவிப்பில் முதன் முதலில் இக்கட்டுரை வெளியாயிற்று. இதன் தேதியிடப்படாத பிரதியொன்று எனக்கு 17, ஏப்ரல் 1995 அன்று தபாலில் அனுப்பப்பட்டது.* [29]"An Unnecessary Exercise."